2017 ஜூலை 13]

(ஆ) தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் மதுரை உள்ளிட்ட பல மாவட்டங்களில் அனுமதியின்றி தாது மணல் வெட்டி எடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் மதுரை உள்ளிட்ட பல மாவட்டங்களில் 81–க்கும் மேற்பட்டிருக்கக்கூடிய தாது மணல் குவாரிகளில் பல முறைகேடுகள் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன என்று அதுவும் செய்தியாக இப்போது வெளியிலே வந்து கொண்டிருக்கிறது. ஏற்கெனவே, இதுகுறித்து ஒரு முழுமையான விசாரணையை நடத்திட வேண்டுமென்று ஐ.ஏ.எஸ். அதிகாரி, மதிப்பிற்குரிய திரு. ககன்தீப் சிங் பேடி அவர்கள் தலைமையிலேயே ஒரு விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. அந்த விசாரணைக் குழு பல மாவட்டங்களுக்கு நேரடியாகச் சென்று, ஆய்வு நடத்தி, அதனுடைய விரிவான அறிக்கையை 17–9–2013 அன்று, அன்றைக்கு முதலமைச்சராக இருந்த மறைந்த அம்மையார் அவர்களிடத்திலே வழங்கியிருக்கிறார்கள். அறிக்கை வழங்கி நான்கு வருடங்கள் ஆகியிருக்கின்றன. இதுவரையில், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அறிக்கை தந்த 17–9–2013 அன்றே முன்னாள் முதலமைச்சர் அவர்கள், "பெருங்கனிம குவாரிகள் குறித்து, கொள்கை முடிவு எடுக்கப்படும்" என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால், இதுவரையிலே எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே, அதற்கு உரிய நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டும். அதுமட்டுமல்ல; தவறு செய்துகொண்டிருப்பவர்கள்மீது அரசு சட்டப்படி, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் நான் இந்த நேரத்திலே வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தில் கடற்கரைப் பகுதிகளில் தாது மணல் அனுமதியின்றி வெட்டியெடுப்பது தொடர்பாக, மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறப்பட்ட அறிக்கையின் அடிப்படையில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 2013 ஆம் ஆண்டிலேயே திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப.

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2017 ஜூலை 13

அவர்களின் தலைமையில் சிறப்புக் குழு அமைத்து, தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள கனிம சுரங்க குத்தகைப் பகுதிகளை ஆய்வு செய்து, அறிக்கை அளிக்க ஆணையிட்டது.

பின்னர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களிலும், இச்சிறப்புக் குழுவே ஆய்வு செய்ய நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து தாது மணல் வெட்டியெடுப்பது கடந்த 8–8–2013 முதல் தூத்துக்குடி மாவட்டத்திலும், 17–9–2013 முதல் திருநெல்வேலி, கன்னியாகுமரி, மதுரை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களிலும் அரசினால் தடை செய்யப்பட்டு, நடை சீட்டு வழங்குவதும் நிறுத்தப்பட்டுள்ளது. திரு. ககன்தீப் சிங் பேடி அவர்களுடைய ஆய்வறிக்கை பெறப்பட்டு, நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த வழக்கு, 4–9–2017–ல் விசாரணைக்கு வரவுள்ளது. உயர் நீதிமன்றத்தில் தாது மணல் தொடர்பாக தொடரப்பட்ட வழக்கில் உயர் நீதிமன்றத்தின் ஆலோசகராக திரு. V. சுரேஷ் 2016–ல் நியமிக்கப்பட்டார்.

மேற்படி, தாதுமணல் தொடர்பான ஒரு பொது நல வழக்கின் விசாரணையின்போது, சென்னை உயர் நீதிமன்றம், அரசுச் செயலாளர் அந்தஸ்தில் திரு. சத்யப்ரத சாகு, இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் குழு அமைத்து, அதில் மத்திய அரசைச் சார்ந்த இந்திய அணுசக்தித் துறை, ஐ.பி.எம்., சுங்கம் மற்றும் கலால் துறை அலுவலர்களுடன் கனிமம் மற்றும் சுரங்கத் துறை, வருவாய்த் துறை, நில அளவை ஆகிய துறைகள் அடங்கிய குழு ஏற்படுத்தப்பட்டு, தற்சமயம் கடற்கரை மாவட்டங்களில் தாது மணல் மற்றும் அணுசக்தி கனிமங்கள் இருப்பு குறித்து ஆய்வு செய்ய உத்தரவிட்டிருந்தது. அதனடிப்படையில், இந்த ஆய்வு தற்போது நடைபெற்று வருகிறது.

முற்பகல் 11–25

மேற்படி, உயர் நீதிமன்ற உத்தரவின்பேரில், தமிழ்நாடு அரசு தன்னுடைய 23–5–2017 தேதிய கடிதத்தில், மத்திய சுரங்கத் துறை அமைச்சகம் மற்றும் மத்திய அரசைச் சார்ந்த பாஸ்கராச்சாரியா செயற்கைகோள் விண்வெளி பயன்பாடு மற்றும் புவி தகவல் ஆய்வு அமைப்பின் உதவியுடன், கடற்கரை மாவட்டங்களில் உள்ள தாது மணல் படிவு பகுதிகள் முழுவதும் செயற்கைகோள்மூலம் கண்காணித்து அறிக்கை தரக் கோரியுள்ளது. உயர் நீதிமன்ற

2017 ஜூலை 13] *[திரு. எடப்பாடி கே. பழனிசாமி]*

உத்தரவின்பேரில், கடற்கரை மாவட்டங்களில் தாது மணல் வெட்டியெடுப்பது அரசினால் தடை செய்யப்பட்ட பின்பும், அனுமதியின்றி தாது மணல் வெட்டியெடுக்கப்படுவதாக நீதிமன்ற வழக்கு விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டதால், நீதிமன்ற ஆணையின்படி தாது மணல் வெட்டியெடுப்பதை முழுவதும் தடுக்கும் நோக்கிலும், வாகனங்களைத் தணிக்கை செய்யவும், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர்கள்மூலம், மாவட்டத்தில் பணிபுரியும் துணை ஆட்சியர், காவல் துறை, கனிம வளத் துறை, நில அளவைத் துறை மற்றும் இதர துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் அடங்கிய சிறப்பு பறக்கும் படை அமைக்க அரசினால் அறிவுறுத்தப்பட்டு, உரிய கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்னை உயர் நீதிமன்றத்தினால் நியமிக்கப்பட்ட நீதிமன்ற ஆலோசகர் திரு. V. சுரேஷ் தனது அறிக்கையினை நீதிமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். மேலும், இவ்வழக்குகளில் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில், தமிழக அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும். அவ்வளவுதான். (குறுக்கீடுகள்) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு விளக்கம் தந்திருக்கிறார்கள். அதையொட்டி ஒரேயொரு clarification–தான். "கொள்கை முடிவு எடுக்கப்படும்" என்று ஏற்கெனவே இருந்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மையார் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். எனவே, அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். நீதிமன்றத்திலே அந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது; வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. வழக்கு நடைபெற்றுக்*

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2017 ஜூலை 13

கொண்டிருக்கும்போது எந்த அறிவிப்பையும் அரசு செய்ய முடியாது. அது தங்களுக்கும் தெரியும். ஆகவே, அந்த வழக்கு நடைபெற்று முடிந்தபிறகுதான், அதற்கு ஒரு தீர்வு காணப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) தக்காளி, சிறு வெங்காயம் போன்ற காய்கறிகளை கூட்டுறவு மற்றும் பண்ணை பசுமை அங்காடிகள்மூலம் மலிவு விலையில் விற்பனை செய்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. மு.க. ஸ்டாலின்: அடுத்து, விலைவாசியைப் பற்றிய ஒரேயொரு குறிப்பு. இன்றைக்கு, தக்காளி ஒரு கிலோ 100 ரூபாய்க்குமேல் விற்கக்கூடிய நிலை உள்ளது. சிறு வெங்காயம் ஒரு கிலோ 100 ரூபாய்க்குமேல் விற்றுக் கொண்டிருக்கிறது. எனவே, ஏழை, எளிய மக்கள் இதனால் மிகவும் சிரமத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். எனவே, இதனை அரசே கொள்முதல் செய்து, கூட்டுறவு அங்காடிகள் மூலமாகவும், பசுமை அங்காடிகள் மூலமாகவும் குறைவான விலையில், ஏழை, எளிய மக்கள் பயன்பெறக்கூடிய வகையில், அதனை விற்பனை செய்வதற்கு அரசு முன்வருமா என்று நான் கேட்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விலைவாசி உயர்வு குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர், மாண்புமிகு உணவு அமைச்சர், உங்களில் யார் பதில் சொல்லப்போகிறீர்கள்? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

***மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், கூட்டுறவுக் கடைகள்மூலம் வழங்கவேண்டும் என்றுதான் கேட்டார். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கூட்டுறவு கடைகள்மூலம் வழங்கவேண்டுமென்றுதான் கேட்டார். (குறுக்கீடு) நான் சொல்கிறேன், இருங்கள். கூட்டுறவுக் கடைகள்மூலம் வழங்க வேண்டுமென்றுதான் மாண்புமிகு